2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இன்று வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) வேறு ஒன்றும் இன்றைக்கு இல்லை. இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன, உட்காருங்கள்.*

3. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின அறிக்கைகள் அளித்தல், திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.*

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் நகர்ப்புற வளர்ச்சி குறித்த முப்பத்து ஆறாவது அறிக்கையினையும், ஊரக வளர்ச்சி நிதியொதுக்கீடு குறித்த முப்பத்து ஏழாவது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் முப்பத்து ஆறு மற்றும் முப்பத்து ஏழாவது அறிக்கைகளை அச்சடித்து பேரவைக்கு அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிபெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைக்கப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2005–2006, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005–2006 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*